# மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம்

## அமைச்சர் எம்.சி. சம்பத் ஆய்வு

சென்னை, டிச. 6: சென்னையில் ஏ.ஜி.-டி.எம்.எஸ். - வண்ணாரப்பேட்டை இடையேயான மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது. அதனை மாநில தொழில்துறை அமைச்சர் எம்.சி.சம்பத் வியாழக் கிழமை ஆய்வு செய்தார்.

இதுகுறித்து, அரசுத் தரப்பில் வெளியிடப்பட்ட செய்தி:

தேனாம்பேட்டையின் ஏ.ஜி.-டி.எம்.எஸ். பகுதியில் இருந்து வண்ணாரப்பேட்டை வரை 10 கிலோ மீட்டருக்கு சுரங்க மெட்ரோ ரயில் சேவைகள் தொடங்கப்பட உள்ளன. இதற்கான பணிகள் இறுதி நிலையில் உள்ளன.

இந்நிலையில், ஏ.ஜி.-டி.எம்.எஸ். ரயில் நிலையத்துக்கு வியாழக்கிழமை வந்த அமைச்சர் எம்.சி. சம்பத், அங்கு நடைபெற்று வரும் பணிகளை ஆய்வு செய்தார்.

அதைத் தொடர்ந்து, வண்ணாரப்பேட்டை, உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையம் ஆகிய இடங்களில் நடைபெற்று வரும் இறுதிக்கட்ட கட்டுமானப் பணிகளையும் அவர் பார்வையிட்டார்.



சென்னை ஏஜி. டி.எம்.எஸ் முதல் வண்ணாரப்பேட்டை வரையிலான மெட்ரோ ரயில் சுரங்க வழித் தடப் பகுதியில் நடைபெற்று வரும் கட்டுமான பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்த தொழில் துறை அமைச்சர் எம்.சி. சம்பத். உடன் சென்னை மெட்ரோ ரயில் நிறுவன மேலாண்மை இயக்குநர் பங்கஜ் குமார் பன்சல் உள்ளிட்டோர்.

அப்போது, சோதனை ஓட்டத்திற்குத் தயாராக இருந்த மெட்ரோ ரயிலில் ஏறி பார்வையிட்ட அமைச்சர், பணிகளை விரைந்து முடிக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். இந்த ஆய்வின் போது சென்னை மெட்ரோ ரயில் நிறுவன மேலாண்மை இயக்குநர் பங்கஜ் குமார் பன்சல் உள்ளிட்ட அதிகாரிகள் உடன் இருந்தனர்.